[1981 ஜனவரி 23

3. அறிவிப்புகள்.

அ. மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

'' தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 உள்விதி (1)-ன் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் இரண்டாம் கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (panel of chairmen) நியமிக்கிறேன்.

1. திரு. வி. வி. சுவாமிநாதன்.
2. திரு. ஜே. எஸ். இராசு
3. திரு. என். எஸ். வி. சித்தன்
4. திரு. எஸ். சிவசாமி.

ஆ. உறுப்பினர் உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்த உறுதி மொழி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு மற்றும் ஓர் அறிவிப்பு.

தேர்தல் மனு எண். 11/1980-இன் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் கேட்டுக் கொண்டதற்கிணங்க திரு. கி. சட்ட நாத கரையாளர் அவர்கள் தான் சார்ந்துள்ள கட்சி பற்றி அளித்த உறுதிமொழியின் உண்மை நகல் ஒன்று பதிவு அஞ்சல் மூலமாக சென்னை உயர்நீதி மன்றத்துக்கு அனுப்பி வைக்கப் பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: நான் கொடுத்திருக்கும் ஒத்தி வைப்புத் தீர்மானம்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர் மானங்கள் நாளையிலிருந்து எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, விதி 73-ன் கீழ் * * * * * * ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபையில் அதைப்பற்றிப் பேச நான் அனுமதிக்கவில்லை.

திரு ப. நெடுமாறன்: அதைப்பற்றி நான் ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன்.

1981 ஜனவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் சொன்னால் அதுவே ஒரு விவாதமாகிவிடும்.

*   *   *   *

திரு ப. நெடுமாறன் : ஆளுநர் அவர்கள் சட்டசபையின் ஒரு அங்கமாக இருக்கிறார்கள் ** **

திரு. அ. செல்வராசன் : அவர்கள் சொல்வதெல்லாம் பத்திரிகைகளில் வருமா |

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் அவர்களை நியமிக்கின்ற அதிகாரம் மத்திய அரசைச் சேர்ந்தது. அதைப் பற்றி விவாதிக்க இங்கே உரிமை இல்லை. ஆகவே இதைப் பற்றி பத்திரிகைகளில் பிரசுரிக்க வேண்டாம். ஆகவே அவற்றைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : சென்ற கூட்டத் தொடரில் கேள்விகளுக்கு 15 நாட்களுக்குள் பதில் அளிக்கப்படும் என்று சொன்னீர்கள் 4—7—1980 அன்று அனுமதிக்கப்பட்ட. . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று இருபது கேள்விகள் எடுத்துக் கொள்ளப் பெற்று விடையளிக்கப் பெற்றுள்ளன. அனுமதிக்கப்பட்ட எல்லாக் கேள்விகளும் வரிசையாக வரும்.

5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்

திரு. கோ. விஸ்வநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். :—

'' ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப் பெற வேண்டும் :—

' 1981-ஆம் ஆண்டு, சனவரி திங்கள் 21-ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு * தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர். ' ''

திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. விஸ்வநாதன் அவர்கள் மொழிந்த தீர்மானத்தை நான் வழி மொழிகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

* 175-184ம் பக்கங்களில் ஆளுநர் உரை இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது. அதன் தமிழாக்கம் 185-198-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.